# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை (நிகழ்நிலை), ஆண்டு III – 2021

## சர்வதேச முதலீட்டுச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 06

ஒவ்வொரு பகுதியிலுருந்தும் குறைந்தது **ஒரு (01) வினாவையேனும்** தெரிவுசெய்து **மூன்று வினாக்களுக்கு** விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

**பகுதி அ**

Limuria கண்டத்தில் அமைந்துள்ள Bolonia என்பது வளங்கள் நிறைந்த வளர்ந்து வரும் நாடொன்றாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த, வெளிநாட்டு அகழ்வு முதலீடுகளை ஈர்ப்பதற்கு சிறப்பு ஆகழ்வு மாவட்டமொன்றினை (Velona) Bolonia அரசாங்கம் உருவாக்கி, உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்களை வளர்ந்து வரும் அகழ்வுத்துறையில் முதலீடு செய்ய Bolonia அழைப்பு விடுத்தது. இந்த முனைவினால் கவரப்பட்டு, Selonia வினது சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட நிறுவனமொன்றான Mintex Resources Limited (Mintex) ஆனது Velona அகழ்வு மாவட்டத்திலுள்ள Lima (Lima திட்டம்) என்பதில் அமைந்துள்ள தங்க படிவுவொன்றில் முதலீடு செய்ய தீர்மானித்தது. 2010இல், Lima தங்கப் படிவுகள் 300 ஹெக்டயர் பரப்பளவொன்றுக்குள் விலைமதிப்புள்ள உலோகங்களை ஆராய்வதற்கும் சுரண்டுவதற்கும் வைத்திருப்பாளருக்கு அனுமதியளிக்கும் ஒப்படை ஒப்பந்தமொன்றில் திரு. சுமித் என்பவருடன் Mintex ஈடுபட்டது. 2011இல், Mintex ஒரு மேற்பரப்பு படமாக்கல், மாதிரி மற்றும் துளையிடல் திட்டத்கை செயல்படுத்தத் தொடங்கியதுடன் அனுமதிக்காக அகழ்வுத்திட்டத்தின் ஆய்வுக் கட்டத்திற்குத் தேவையான சுற்றாடல் அனுமதியும் பெற்றுக்கொண்டது.

2012இல் Lima தங்க படிவுகளை ஆராய்ந்தும் சுரண்டுவதற்காவும் Bolonia இன் National Mining Agency (NMA) உடன் சலுகை ஒப்பந்தமொன்றில் Mintex ஈடுபட்டது, மேலும் நிறுவனம் அகழ்வுத் திட்டத்தின் 100% சொந்தத்தினைக் கொண்டிருந்தது. பொருத்தமான Bolonia சட்டங்களின் கீழ், அகழ்வுத் கட்டத்திற்குள் நகர்வதற்கு முன், Mintex சுற்றாடல் உரிமத்தினைப் பெறவேண்டும். அதன்படி, அந்த உரிமத்தைப் பெறுவதற்காக சுற்றாடல் மற்றும் நிலையாதார மேம்பாட்டு அமைச்சகத்திடம் சுற்றாடல் தாக்க ஆய்வினை (Environmental Impact Study - EIS) Mintex சமர்பித்தது. இருப்பினும், Lima திட்டம், Paramo ஆனது, Paramo இந்த குறிப்பிட்ட நிகழ்வில் "Venus" என அழைக்கப்படும், தனித்துவமான சூழல்தொகுதியில் இருப்பதாகக்கூறி சுற்றாடல் உரிமத்தை வழங்க அமைச்சர் மறுத்துவிட்டார், இத்தீர்மானமானது, 2013இல், அமைச்சகத்துடன் இணைக்கப்பட்ட ஆராய்ச்சிப் பிரிவால்

தயாரிக்கப்பட்ட Paramo வின் நிலைப்பட ஏடு ஒன்றின் அடிப்படையில் எடுக்கப்பட்டது, அதன்படி Bolonia வின் Paramo சூழல்தொகுதிகள் அடையாளம் காணப்படுதல் வேண்டும். Bolonia வின் திருத்தப்பட்ட அகழ்வுச் சட்டத்தின்படி, Paramo சூழல் தொகுதி உட்பட மிகக் குறைவான விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, அறிவிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் அகழ்வு ஆய்வு மற்றும் சுரண்டல் பணிகளையும் திட்டங்களையும் மேற்கொள்ள அனுமதி இல்லை என்பதாக மேலும் குறிப்பிடுகின்றது.

இதற்கிடையில், Paramo சூழல் தொகுதி சட்டபூர்வமாக வரையறுப்பது Bolonia வில் மிகவும் சர்ச்சைக்குரியதாக மாறியதுடன் மேலும் Paramo of Venus இல் எதிர்பார்க்கப்படுவதான சுற்றாடல் பாதிப்பின் விளைவாக பல சிவில் சமூக அமைப்புக்கள் (CSOs) Lima திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. சுற்றாடல் அமைச்சர் சுற்றாடல் உரிமத்தை வழங்க மறுத்தாலும், பொருளாதார மற்றும் சமூக நன்மைகளைக் கருத்தில் கொண்டு திட்டத்தை ஒரு மூலோபாய மேம்பாட்டுத் திட்டமாக அறிவித்து சலுகை ஒப்பந்தததின் கீழ் ஆய்வுக் கட்டத்தின் முதல் ஓராண்டு நீட்டிப்புக்கான Mintex இன் விண்ணப்பத்தை NMA அங்கீகரித்தது. எவ்வாறாயினும், Bolonia வில் Mintex எதிர்கொண்ட எதிர்பாராத சூழ்நிலைகளின் நிமித்தம் நிறுவனம் தனது 49 சதவீத பங்குகளை Salamon என்ற தீவில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்திற்கு விற்பனை செய்ததுடன், சலுகை ஒப்பந்தத்தின் கீழ் ஆய்வுக்கட்டத்தை இரண்டாவது வருடமொன்றிற்கு நீட்டிக்கவும் கோரியது.

இரண்டாவது நீட்டிப்பை வழங்கும்போது, Paramo of Venus ஒன்றுடன் ஒன்று சேராத பகுதிக்கு பிரத்தியேகமான நீடிப்பு வழங்கப்பட்டதாக NMA கூறியது, மேலும் எல்லைகள் வரையறை செய்யப்பட்டவுடன், Paramo of Venus உடன் ஒன்றோடொன்றமைவாக சேரும் பகுதிகளை ஒப்படைக்க வெண்டுமென Mintex இற்கு மேலும் தெரிவித்தது. 2017இல், நாட்டின் Paramos எல்லைகள் தீர்மானமொன்றின் மூலம் வெளியிடப்பட்டன, அகழ்வுச் சலுகை ஒப்பந்தம் மற்றும் சுற்றாடல் உரிமங்கள் கொண்ட திட்டங்கள் Paramo ஒன்றில் அமைந்திருந்தாலும், இந்த சலுகைகள் காலாவதியாகும் வரை மட்டுமே செயல்பாடுகளைத் தொடர அனுமதித்தது. எவ்வாறாயினும், CSO இனால் எல்லை நிர்ணயச் செயல்பாட்டில் பொதுக் கலந்தாராய்வு காணப்படவில்லையெனக் குற்றஞ்சாட்டி, இந்தத் தீர்மானம் நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்டது. 2018இல், நீதிமன்றம் உரிய செயல்முறைச் செயலினைப் பின்பற்றி Paramos இன் எல்லைகளை மீண்டும் வரையறுக்க சுற்றாடல் அமைச்சருக்கு உத்தரவிட்டு தீர்மானமானத்தை நீதிமன்றம் நிராகரித்தது.

எவ்வாறானினும், மீள் எல்லை நிர்ணய நடவடிக்கையை நியாயமான கால எல்லைக்குள் அமைச்சரால் முடிக்க முடியவில்லை. மேலும், Paramos சட்ட எல்லைகள் மீதான நிச்சயமற்ற தன்மை காரணமாக Mintex நிறுவனத்தால் சுரண்டல் கட்டத்தைத் தொடங்க தேவையான சுற்றாடல் உரிமத்தைப் பெற முடியவில்லை. தற்போதுள்ள Paramos நிலப்பட ஏடானது Paramos of Venus என்பதுடன் கணிசமாக ஒன்றுடனொன்று சேர்ந்திருப்பதால், சலுகை ஒப்பந்தத்தின் பகுதியில் நிறுவனம் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா என்பதும் நிச்சயமற்றதாக இருந்தது. இறுதியாக, பல ஆண்டுகள் Bolonia வில் செலவழித்தன் பின்னரும் USD 150 மில்லியன் முதலீட்டில் Lima திட்டத்தை உருவாக்கியதன் பின்னரும், Mintex இந்தச் சலுகை ஓப்பந்தத்தினை முறித்து, 1987 இல் வலுவிற்கு வந்த Bolonia மற்றும் Selonia (BIT) இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தின் கீழ் முதலீட்டுப் பிணக்குகளை தீர்ப்பதற்கான சர்வதேச மையத்தில் (ICSID) நடுத்தீர்ப்பொன்றைத் தொடங்கியது. இந்த BIT அனைத்து முக்கிய

முதலீட்டுத் துறைகளையும் ஒப்பந்த அடிப்படையிலான முதலீட்டு நடுத்தீர்ப்பு மன்றத்திற்கான நேரடி உதவியையும் வழங்குகிறது.

1. Bolonia அரசாங்கத்தின் சட்ட ஆலோசகராக, ICSID சமவாயத்தின் பிரிவு 25 இன் கீழ் நடுத்தீர்ப்பு மன்றத்தின் நியாயாதிக்கத்தினை Bolonia வினால் சவாலுக்குட்படுத்தக் கூடிய காரணங்களைப் பற்றி விவாதிக்கும் சட்ட அபிப்பிராயமொன்றைத் தயாரிக்க.

2. ICSID நடுத்தீர்ப்பு மன்றத்தில் Mintex சார்பாக பிரசன்னமாக உம்மை அமர்த்தியுள்ளது. 1987இன் Bolonia-Selonia BIT அடிப்படையில் முதலிட்டினை வரவழைக்கும் நட்டின் (host State) மீது வலுவான குற்றச்சாட்டுக்கள் அல்லது குற்றச்சாட்டுக்களை பற்றிய சட்ட அபிப்பிராயமொன்றைத் தயாரிக்க.

3. நீர் Paramo பாதுகாப்பு தொடர்பில் பணிபுரியும் CSO இன் சட்ட ஆய்வுப் பிரிவின் தலைவராகவும், இந்த நடுத்தீர்ப்புச் செயன்முறையில் *amicus curie* ஆக பங்கேற்கத் தயாராக இருப்பதாவும் உம்மைக் கருதுக. பொது நலன்களை ஒழுங்குபடுத்துவதற்காக அரச உரிமையை (right to regulate) உறுதிசெய்து, முதலீட்டு அல்லாத நடவடிக்கைகள் அடைய சட்ட அடிப்படைகள் மற்றும் கொள்கை முன்னோக்குகளை விவரிக்கும் சட்ட அபிப்பிராயமொன்றைத் தயாரிக்க.

## பகுதி ஆ

4. நாகர் என்பது வேகமாக வளர்ந்து வரும் நாடொன்றாகும். இது வெளிநாட்டு மூலதனத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. சமீபத்தில், வெளிநாட்டு முதலீடுகளின் நுழைவின் போது உடன்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காத சில முதலீட்டு திட்டங்களை ரத்துச் செய்ய பொருளாதார மேம்பாடுக் குழுவைவொன்றை அரசாங்கம் நியமித்தது. நாகர் அரசாங்கம் தற்போதுள்ள ஆடைத் தொழிற்சாலையை நவீன உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களுடன் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதியில் புனரமைக்க ABC Ltd என்பதுடன் உடன்பட்டது. இத்திட்டமானது திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தினையும் உள்ளடக்கியுள்ளது. இத்திட்டத்தில் முதலிடுவதற்கு உடன்பட்ட மூலதனத்தை கொண்டு வருவதற்கும். தேவையான மூலதனத்தை நாட்டிற்குள் கொண்டு வருவதனை உறுதி செய்வதற்காக நாகர் வங்கியின் சான்றிதலையும் பெறுவதற்கும் நிறுவனம் உடன்பட்டது. எவ்வாறாயினும், நிறுவனம் மூலதனத் தேவைக்கு இணங்கவில்லையாதலால் திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டமானது பாதிக்கின்றது என்பதாகவும் அப்பகுதியில் பொதுமக்களின் அழுத்தத்தை எதிர்கொள்ளும் என்று அக்குழு கண்டறிந்துள்ளது. மேலும், அந்த கழிவு மேலாண்மை அமைப்பு பயனற்றதாக இருந்தால், இத்திட்டம் நாட்டிற்கு எதிர்பார்க்கப்படும் நிலையான பொருளாதார நன்மைகளை கொண்டுவராது, மாறாக அதிக இரசாயணங்கள் பயன்படுத்தப்படுவதால் சுற்றாடல் பேரழிவை உருவாக்கும். இக்குழுவின் ஆலோசனைக்கமைவாக, தற்போது அரச அதிகாரிகள் திட்டத்தினை நிறுத்தி, அரச மானியத்துடன் அரசுக்குச் சொந்தமான நிறுவனத்திடம்

ஒப்படைக்க முடிவு செய்துள்ளனர். ABC Ltd அரசாங்கத்திற்கு எதிராக நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றது. நாகர் முறை தவறியதானவும் (due process), பாகுபாடு குறித்த சர்வதேச விதிகளை மீறுவதாகவும் குற்றஞ்சாட்டுகிறது.

மேலே உள்ள சூழ்நிலைகளில் எழுகின்ற சட்டச்சிக்கள்களை பகுப்பாய்வு செய்க.

5. "வெளிநாட்டு முதலீட்டாளர்களாக வெளிநாட்டில் செயற்படும் அதன் பிரசைகள் தேசியத்தின் அடிப்படையில் அதிகார வரம்புச் செயற்பாட்டின் மூலம் சர்வதேச விதிமுறைகளுக்கிணங்க செயல்படுவதை உறுதிசெய்யும் திறன் சொந்த அரசுக்கு உள்ளது."

   வெளிச்செல்லும் வெளிநாட்டு முதலீடுகளுடன் தொடர்புடைய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மீதான சொந்த நாட்டு (home-State) நடவடிக்கைளின் பின்னணியில் மேலுள்ள கூற்றினை நூணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க.

6. சீலாந்து அரசு, அப்பிராந்தியத்தில் இயற்கை மற்றும் மனித வளங்கள் செறிந்த, அதிக கல்வியறிவு விகிதங்கள் ஆகியவற்றைக் கொண்ட வளந்துவரும் நாடொன்றாகும். இருப்பினும், அதனையொத்த அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில், வெயிநாட்டு நேரடி முதலீட்டின் வருகை ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. வசதியான நாடுகளில் இருந்து அதிக வெளிநாட்டு நேரடி முதலீட்டினை கவர்ந்திழுப்பதற்கு நவீன நகரமொன்றினை (Modern City) அண்மையில் சீலாந்து அரசாங்கம் நிறுவியது. FDI முயற்சிகளினால் பெறப்படுகின்ற நலன்கள் குறித்து அதிக அக்கறை கொண்டுள்ளதாக அதனது புதிய வெளிநாட்டுக் கொள்கை வெளிப்படுத்துகின்றது. மேலும், நிலையாதார பொருளாதார பலன்களைப் பெறவும் முதலீட்டளர்களை கவர்ந்திழுக்கவும் சாதகமான சூழலை மேம்படுத்தி நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் உள்வரவுகளை அதிகரிக்கும் பொருட்டும் அரசாங்கம் தற்போது அதன் வெளிநாட்டு முதலீட்டு சட்டங்களை மீளாய்வு செய்வதற்கு முயலுகின்றது.

   சீலாந்து வெளிநாட்டு முதலீட்டுச் சட்டங்களையும் அவற்றின் தாக்கத்தையும் ஆய்வு செய்ய ஆய்வாளரொருவராக நீர் நியமிக்கப்பட்டுள்ளீர் எனக் கருதிக் கொள்க. சீலாந்துக்கான சிறந்த மாதிரியை முன்மொழிய உமது வரைவில் நீர் கருதும் அம்சங்களை பட்டியலிடுக.

**********